

உ

ஓம் தத் ஸத்

பராசத்தியே நமஹா

ஒழுகமங்கல மென்னும்

உலகமங்கல மாரியம்மன் பேரில்

# பக்திரஸ கீர்த்தனை.

நாகூர் மகா-௱-௱-ஸ்ரீ

க. ராஜகோபால் உபாத்தியாயரின் மாணாக்கன்

தரங்கன்பாடி, வ. நடராஜன் இயற்றியதை

ஷியூர்

ஆ. மு. ரெத்தினவேல் பிள்ளை அவர்கள்

திரவிய சகாயத்தால்,

பிரசுரிக்கப்பட்டது.

இரத்தின விலாசம் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

குற்றம்பொறுப்பீர் நற்றவப்பெரியீர்.

1926

இதன்விலை] [அணா 1

OFFICE OF THE ... OF BOOKS
16 APR 1926
MADRAS

176791



ஓம்.

பராசக்தியேநமஹா.

காலீர்த்தகி சூலி கௌமாரி சங்கரி கார்ந்திவளர்
மாலாரிமய வரோதய சுந்தரிவான்புவிகோள்
ஆலர்லழண்ட பரன்பாக மேவியணி வதந்தே
மேலாதரிக்குஞ் சிவர்நந்தி காப்பன்றிவேறிலையே.

மதுரைமீநாக்ஷி என்றவர்னம்.

வரவேணுந்தாயே ஒழுகை
வளர்மாரி நீயே

வன்னக் காம தேனுமீதுவுல்லாசமாய்
நன்னயமாய்வருவாய் வரந்தருவாய்
வெகுவிரைவாய் நம்பினேன் (வரவேணு)

கரங்குவித்துவுன் திருப்பதம்தை
கனம்பெரத்துதித்தேன் மனமகிழ்தேன்
தினம்புகழ்ந்தேன் அம்பிகா (வரவேணு)

மெஞ்ஞானபோதகியாக வுலகெங்கும்
மேன்மையதாய்விளங்க செல்வமோங்க
வந்தாய்துலங்க பாலன்முன் (வரவேணு)

சித்தமிரங்கியுன் சேயன்நடராஜன்
பக்தன் முகம்பாராய் பவந்தீராய்
சீலந்தாராய் யென்னேராய் (வரவேணு)

சுத்தமெஞ்ஞானபூரணி (என்றவர்னமெட்டு)

தந்தருள் மெஞ்ஞான கோள்கையே நித்தியகல்யாணி (தந்தருள்)
வந்தவழியையமரந்து வையகந்தனிலுகந்து
சிந்தைநொந்து வாடுரேனம்மா அம்மா அம்மா (தந்தருள்)

கர்மசாகரந்தனில் வர்மபடுமென்தனை
தர்காத்திடும் யெக்காலுந்தாயே தாயே தாயே (தந்தருள்)

புல்லறிவுடையோனான நல்லறிவிலாதபென்னை
அல்லும் பகலாளுவாய்நீயே நீயே நீயே (தந்தருள்)

தக்கதோர் தரங்கைநேமி முக்காலும்பணிந்தேன் வாமி
பக்த நடராஜனை க்ஷேமி க்ஷேமி க்ஷேமி (தந்தருள்)

காட்சியாய் விளங்குங்கந்தா என்றவர்னம்,

ஆட்சியாய் விளங்குந்தாயே
ஆதரிநீ வேறிலையே ஆட்சி

மாதரிவீரிவுமையே
மாயியே மகமாயியே மகமாயியே ஆட்சி

தொகேரு

சூட்சாதி சூட்சணி
சுகுணப்பிரகாசினி

பாட்டு

தாட்சண்ய காமாட்சியும்நீ
தஞ்சமென்றுந்தனை கெஞ்சினேன்மாலினி ஆட்சி

தொகேரு

சாம்பவிதேவி
சதாசிவன்பாரி

பாட்டு

நாமமதையான் தினமுங்கோரி
நற்கெதி பெற்றிட நத்தினேன் நேரில் ஆட்சி

தொகேரு

சத்துரு சம்மாரி
சடாட்சரரூபி

பாட்டு

எத்திசையோரும் புகழுமாரி
இனிநடராஜன் குறைதீர் கெவுரி ஆட்சி

## ஞானனந்தப் பிரசங்கமே என்றவர்னமெட்டு

மகிடாசூரசம்வர்த்தனி ஜெகரட்சணி — மகிடா

அகிலமதிலசுரருடல் பொடியாக்கி
அடியவர்க்கிருந்திடும் குறைகளை நீக்கி
மகிழ்தலம் புகழவே மங்களமாக்கி
மனமுடன் வானவர் துன்மங்கள்போக்கிய — மகிடா

பாருக்குள் பர்ப்பல ரூபவெய்யாரி
பணிந்திடும் பேர்களையாளுஞ்சிங்காரி
யாருக்கும் நவிலவொண்ணுத வோங்காரி
அன்புடன் யெந்தனையாதரி மாரியே — மகிடா

துர்க்கை சாமுண்டியென துதிப்பவர்கோடி
தொல்லுலகாசை யை துலைத்துனை நடி
திக்குவேறில்லை யென பிடித்திட்டேன்கேடி
ததிங்கினதோமென தில்லையிலாடிய — மகிடா

தந்தையுந்தாய்குரு தெய்வமும்நீயே
தரணியோர்கள் பிணிதீர்த்திடுந்தாயே
கந்தமலர்ப்பதந் தந்தருள்வாயே
கழலிணைதனில்ச்சேர் நடராஜசேயே — மகிடா

### கந்தாகதிதந்தாள் என்றவர்ணம்

வந்தாள்கதி தந்தாள்வாய்நீயே
வணங்கினேன் பாலனுந்தாயே — வந்தாள்

சிந்தனைசெய்திட்டேன்சேயே
சித்தம்வய்த்தாண்டிடுவாயே

முடுகு

சொந்தமுடனேயுன் கந்தமலர்ப்பதம்
எந்தவிதத்திலும் வந்தனைசெய்குவேன் — வந்தாள்

தொகேரு

சுந்திரமிருந்து வளர்கின்ற பரிபூரணி

சுகுணகல்யாணியுமையே

மந்திரசுரூபிவோங்காரிஸ் ரீங்காரியே
மனோன்மணியானவளும்நீ

அந்திரமாய் வரும் ஊழியையிலக்கிட
அஞ்சலிசெய்து நின்றேன்

சந்தண கதம்பமலரணிகின்ற மாரியே
சித்தமதுவைத்தாளுவாய்

பாட்டு

மக்தநடருஜனின்பாட்டு
பகவதிதேவிநீகேட்டு

சத்துருசங்கரி சாம்பவி சாதரி
முக்தியளித்திடும் சுத்தமாரிமுத்தே வந்தாள்

காதாபாய் என்றவர்னமெட்டு

பல்லவி

தாயேசருணமம்மா தாயே

அநு பல்லவி

தர்பரிலோக தயாபரி நம்பினேன் தாயே

சரணம்

நீயேயல்லால்யெனக்கு
வேறு தெய்வமுளதோ

நிரஞ்சனி தஞ்சமெனபுகுந்தேனுன்
வரமருளு மூவுலகோர் போற்றிடும் தாயே

தொகேரு

ஓயாதகவலையும் வோழியாதவறுமையும்
யிவ்வுலகுதனில்
பேயாகவந்து யெனைபிடியாமலுந்தனின்
பேரின்பமுத்தியருள்வாய்

176791

பாட்டு

மாயன் சகோதரியே
மாதவர்புகழுமயே

மந்திரபூரண யந்திரசேகரி
வந்தருளித்ததி மைந்தனை கார்த்திட தாயே

தொகேரு

மதிரவியினன்னைநீ மகேஸ்வரிமாயிநீ
மலையரசன்மகளும்நீயே
பதிபுகழ் கஜ முகன்கந்தனையீன்ற
பார்வதியம்பிகையும்நீயே

பாட்டு

துதிநடராஜ சாமி
துணையுன்னடியேக்ஷமீ

துலங்கும் வொழுகைநகரிலென்றளும்
விளங்கும் வேதவேதாந்தி யெனையாளும் காமே
கந்தப்பனே என்றவர்னம்

176791

கருணைமலர் வாசகியே வா யித்ததியே
கற்றரியாயேழையென்னை
கார்ப்பதாரு பூ வுலகமீது கருணை
சந்ததமுவுந்தனையே யான் சிந்தித்தேனே
பந்தபாசந்தன்னை நீக்கி
கார்ப்பதாரு பூ வுலகமீது கருணை
பஞ்சதுமோல் பட்டதுன்பம் நான் கொஞ்சமல்ல
அஞ்சிடாதே யென்றுசொல்லி
கார்பபதாரு பூ வுலகமீது கருணை
நாகூர்வாழும் ராஜகோபால் மா ணிக்கனுன்னை
நாடும் நடராஜனென்னை
கார்ப்பதாரு பூவுலகமீது கருணை

பராசக்தி திருவடிகளே சருணம்.

